**அறனாயக பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 ஜுன் 12 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 ஆகஸ்ட் 11 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் அறனாயக பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் மீதிகள் மற்றும் உபயோகப் பதிவேடுகள் பிரகார மீதிகளிற்கு இடையில் கூட்டுத் தொகை ரூபா 1,531,099 ஆன வித்தியாசம் காணப்பட்டது | நிதிக் கூற்றுக்கள் மற்றும் அதற்குரிய உபயோகப் பதிவேடுகளை இணக்கஞ் செய்து சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஊழியர் கடன் தொடர்பாக தகலவ்களை பரிசோதித்து சரி செய்து கொள்ள மற்றும் நானாவித வைப்புக்கள் மற்றும் ஊழியர் பிணை வைப்புக்களை எதிர்காலத்தில் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | கூட்டுத் தொகை ரூபா 8,409,744 ஆன 02 கணக்கு விடயங்களுக்கான அட்டவணைகள் சமர்பிக்கப்படாததால் கணக்காய்வின் போது திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை. | கணக்கு விடயங்களை உறுதிப்படுத்த போதிய சான்றுகளை சமர்பிக்க வேண்டும். | நிலையான சொத்து பதிவேட்டை சரியான முறையில் நாளாதுவரையாக்கி தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

### 1.4 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (ஆ) திகதியற்ற 01/2010 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 7.4(ii)(iii)(iv) பந்தி | எழுத்து மூல அறிவித்தல் இன்றி சபைக்கு சமுகமளிக்காத 22 சந்தர்ப்பங்களிற்காக அங்கத்தவர்களிற்கு ரூபா 335,000 ஆன அங்கத்துவ படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபையினால் விடுமுறை அங்கீகரித்துள்ளதாக சபை அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதால் அன்றைய தினம் சபைக்கு சமுகமளிக்காத போதும் அவ் அங்கத்தவர்களுக்கு படிக்கள் செலுத்தப்பட்டதுடன் எதிர்காலத்தில் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 11,815,737 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 8,202,140 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் வரி | 2,783,000 | 2,607,213 | 2,493,532 | 131,187 | 2,567,000 | 2,795,823 | 2,831,791 | 108,779 |
| (ii) | வாடகை | 3,239,000 | 2,550,143 | 2,703,101 | 160,492 | 2,642,600 | 1,924,885 | 1,965,846 | 321,131 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 560,200 | 373,483 | 374,233 | - | 360,100 | 367,352 | 367,352 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 21,956,800 | 21,071,851 | 22,959,174 | 31,687,447 | 13,966,600 | 15,213,695 | 22,287,223 | 29,861,490 |

### 2.2.2 வீதவரி மற்றும் வரி

#### (அ) வீதவரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை விதவரி மீதி ரூபா 95,453 ஆனது. வீதவரி அறவிடுவதற்கு சபை அதிகார எல்லையில் அனைத்து அசைவற்ற சொத்துக்களும் 05 வருடத்திற்கு ஒரு முறை மதிப்பீடு செய்ய வேண்டிய போதும், 2011 ஆண்டின் பின்னர் ஆதனங்களின் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 1987 இல் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 பிரிவு பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கும், அசைவற்ற ஆதனங்களை உரிய முறையில் மதிப்பீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை தொகையை எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுப்பதாகவும் புதிய மதிப்பீடொன்று செய்வதற்கு மாகாண மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட போதும் இதுவரை திகதியொன்று பெற்றுத் தரப்படவில்லை. |

#### (ஆ) ஏக்கர் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 35,734 ஆனதுடன், அவற்றில் 03 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலவி வரும் ரூபா 25,236 தொகை உள்ளடங்கியிருந்தது. | நிலுவை மீதிகளை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏக்கர் வரி ஆதனங்கள் தொடர்பாக பிரச்சினை காணப்படுவதால் அதற்காக மகா சபையிற்கு முன்வைத்து பதிவழிக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

### 2.2.3 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2002 மற்றும் 2004 ஆண்டுகளுக்காக திப்பிட்டிய வாராந்த சந்தையை வாடகைக்கு வழங்கியது தொடர்பாக ரூபா 55,672 தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பழைய நிலுவை மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2004 ஆண்டிற்காக திப்பிட்டிய வாராந்த சந்தையை வாடகைக்கு வழங்கியது தொடர்பாக ரூபா 20,220 நிலுவையை பதிவழிக்க அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள ஆளுநர் அவர்களிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் ரூபா 35,452 ஆன நிலுவையை அறவிட வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. |
| (ஆ) | பழைய கிராம சபை கட்டிடத்திற்காக 05 ஆண்டுகளை விஞ்சிய காலமாக அறவிட வேண்டியதாகவுள்ள ரூபா 97,058 யை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பழைய நிலுவை மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | பழைய கிராம சபை கட்டிடத்திற்காக 2019 திசெம்பர் 31 அன்று பதிவேடுகள் பிரகாரம் அறவிட வேண்டிய நிலுவையை செலுத்துமாறு அறிவூட்டி கடிதம் அனுப்ப நடவடிக்கை எடுக்கிறேன். |

### 2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகள் இடமிருந்து 2019 திசெம்பர் 31 திகதிற்கு பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,573,000 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 29,190,939 ஆனது. அவற்றுள் 05 ஆண்டுகளை விஞ்சிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 50,000 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 13,190,939 ஆனது. | குறித்த தொகையை சபைக்கு அழைப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை அறவட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

### (அ) நிலைபேறான அபிவிருத்தித் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் 2030 நிகழ்ச்சி நிரலில் 17 நோக்கங்களிற்கிடையில் முக்கிய மூன்று நோக்கங்கள் தொடர்பில் முறையான திட்டமொன்றை தயாரித்து நடைமுறைப்படுத்தியிருக்கவில்லை. | முறையான திட்டத்தை தயாரித்து செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆண் பெண் சமநிலை தன்மையை அடைந்து கொள்ள அனைத்து பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளை வலுவூட்ட பயிற்சி நெறியொன்று நடாத்தியதாகவும், காலநிலை மாற்றங்கள் மற்றும் அதன் தாக்கங்களிற்கு எதிராக துரிதமாக செயற்பட நிகழ்சி நிரல் செயற்படுத்தியதாகவும் அறிவிக்கிறேன். |

**(ஆ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மலசல கழிவுகளை வெளியிட சபைக்கு சொந்தமாக பொறுத்தமான காணியொன்று இல்லாததால் அதற்காக இட வசதியுள்ள நபர்களுக்கு மாத்திரம் கலி சேவை வழங்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக கலி பவுசர் குறைபயன்பாட்டுடன் நிலவியதுடன், அதிகார பிரதேச மக்களிற்கு சமமாக சேவையை வழங்கவும் முடியாதிருந்தது. எனினும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் திண்மக் கழிவு முகாமைத்துவம் மற்றும் கலி வெளியிடலிற்கு பொறுத்தமான காணியொன்றை சுவீகரித்துக் கொள்ள சபைக்கு இயலாதிருந்தது. | மலசல கழிவுகளை வெளியிட பொறுத்தமான இடமொன்றை சுவீகரித்துக் கொள்ள வேண்டும். | தெபத்கம வத்த காணியை சுவீகரித்து அல்லது கொள்வனவு செய்ததன் பின்னர் கலி சேவையை குறை பயன்பாடின்றி கொம்போஸ்ட் கருத்திட்டமொன்றுடன் அதிகார எல்லையில் மக்களுக்கு தரமான சேவையை வழங்க எதிர்பார்ப்பதாக அறிவிக்கிறேன். |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 திகதியன்று சபையின் வெற்றிடப் பதவி 18 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் 8 பதவி வகைகளிற்கு ஒப்பந்த அடிப்படையின் கீழ் 3 நபர்கள் மற்றும் அமைய அடிப்படையின் கீழ் 6 நபர்கள் ஆட்சேரக்கப்பட்டிருந்தனர். | முக்கியமான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிககை எடுக்க வேண்டும். | இவ் வெற்றிடங்கள் தொடர்பாக, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் மற்றும் பிரதி பிரதான செயலாளர் அலுவலகத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | நூலகங்கள் 02 இனை நடாத்திச் சென்ற போதும் இரண்டு அங்கீகார நூலகதிபதி பதவி வெற்றிடங்கள் காணப்படுவதுடன், சுடலை ஒன்றை நடாத்திச் சென்ற போதும் நிறந்தர சுடலை பொறுப்பாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது. முன் பள்ளி ஆசிரியர் பதவி அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும், அது வெற்றிடமாகவுள்ளதன் காரணமாக முன்பள்ளி சேவையை நடாத்திச் செல்ல முடியாதிருந்தது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிககை எடுக்க வேண்டும். | வெற்றிட பதவிகள் தொடர்பாக மாதாந்தம் உள்ளூராட்சி உதவி ஆணையாளரிற்கும், ஒவ்வொறு மூன்று மாதங்களும் பிரதி பிரதான செயலாளர் (ஆளணி மற்றம் பயிற்சி) இற்கும் தொடர்ந்து அறிவிக்கப்பட்டுள்ளாத அறிவிக்கிறேன். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.3.1 சொத்துக்களின் பாதுகாப்பபை உறுதிப்படுத்தப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இடுகாடு பதிவேட்டின் படி சபைக்கு சொந்தமாக 38 இடுகாடுகள் காணப்பட்ட போதும், அவற்றை அளவை மற்றும் சுவீகரிப்புச் செய்து சொத்துக்களை பாதுகாத்துக் கொள்ள செயற்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை பாதுகாத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆண்டிற்கு 02 சுடுகாடுகள் அளவு வீதம் அளவை செய்து சுவீகரிப்புச் செய்ய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதாக அறிவிக்கிறேன் |

**3.3.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் வரையும் பதிவுரிமையை சுவீகரித்துக் கொள்ளாது சபையினால் பயன்படுத்தப்படும் வாகனங்கள் மற்றும் டேலர்கள் 11 காணப்பட்டன. | உரித்துரிமையை சுவீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | சொத்துக்களை சுவீகரித்துக் கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருப்பதாக அறிவிக்கிறேன். |

**3.3.3 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 சனவரி 18 ஆம் திகதி மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 784,300 ஆன பொலிதீன் துண்டாக்கும் பிரேல் இயந்திரம் பயன்படுத்தப்படாது காணப்பட்டது. | பயன்படுத்த அல்லது தேவையுள்ள வேறொறு சபைக்கு வழங்கவேனும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) சபைக்கு சொந்தமான பெறுமதி ரூபா 4,288,409 ஆன 04 வாகனங்கள் மற்றும் பெறுமதி ரூபா 767,289 ஆன 02 இயந்திரங்கள், 2009 மற்றும் 2011 ஆண்டுகள் முதல் விளைவற்று காணப்பட்ட போதும், அதற்கு பொருத்தமான செயற்பாடொன்றை எடுத்திருக்கவில்லை. | பராதீனம் செய்ய அல்லது திருத்தம் செய்து பயன்படத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ் வாகனங்கள் தொடர்பாக பண்டக கணிப்பீட்டு சபை அறிக்கையின் பரிந்துரை பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (இ) அதிக நிறை காரணமாக போக்கு வரத்து செய்ய கடினமானமை மற்றும் பிரதேசத்திற்கு | பயன்படுத்த அல்லது பொருத்தமான | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. |

| | |
|---|---|
| பொருத்தமின்மை காரணமாக 2015 ஆண்டிலிருந்தே விளைவற்று காணப்படும் ரூபா 5,500,000 பெறுமதியான யூடோன் தளர்த்தும் உருளையை அத்தேவையுடைய வேறு உள்ளூராட்சி நிறுவனம் ஒன்றிற்கு ஒப்படைக்க அல்லது பயன்படுத்த அல்லது போருத்தமானதை செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செயற்பாடொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆண்டில் இடம் பெற்றிருந்த வாகன விபத்தொன்று தொடர்பில் பொறுப்புவாய்ந்த தரப்பினரை இனங்கண்டிருந்த போதும், ஏற்பட்டிருந்த ரூபா 550,973 ஆன நட்டத்தை மீளாய்வாண்டு இறுதி வரையும் அறவிட்டிருக்கவில்லை. | நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் என்னும் வகையில் பிரதான அமைச்சின் செயலாளரிடம் அறவிடல் தொடர்பாக ஆலோசனை கோரிக்கப்பட்டுள்ளது. |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### தீர்க்கப்படாத கணக்காய்வு அவதானிப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தீர்க்கப்படாது 2001 ஆண்டிற்கு முன்னரிலிருந்து முன்கொண்டு வரப்படும் ரூபா 631,350 ஆன தொங்கல் கணக்கின் மீதியை தீர்ப்பதற்கு இயலாதிருந்தது. | தொங்கல் கணக்கின் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தகவல்களை கண்டறிய உரிய ஆவணப் பதிவேடுகள் இல்லாததால் தீர்த்துக் கொள்ள முடியாதுள்ளது. |